Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 139 | உள்ளூர் - 19.05.2026 | செவ்வாய் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 139 | வெளியூர் - 20.05.2026 | புதன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

ஒரே ராசியில் பிறந்த இருவருக்கு திருமண பொருத்தம்!

சரக்கு பிரிவில் 158 காலியிடங்கள்!

சுற்றுலா தலங்களில் குதிரை சவாரிக்கு கட்டுப்பாடுகள்!

அரசு பேருந்து ஓட்டுநர்கள் கைப்பேசி பயன்படுத்த தடை!

## ஈரான் மீது நடத்தவிருந்த தாக்குதல் நிறுத்தம்; டிரம்ப்!



வாஷிங்டன், மே. 19–

ஈரானின் அணு ஆயுத திட்டங்களை முன்வைத்து அந்தநாடு மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் கடந்த பிப்ரவரி 28–ந்தேதி போர் தொடுத்தன. இதற்கு ஈரானும் கடுமையான பதிலடி கொடுத்தது. இஸ்ரேல் மீதும், அமெரிக்காவின் படைத்தளங்கள் அமைந்துள்ள சவுதி அரேபியா, அமீரகம், ஓமன் உள்ளிட்ட வளைகுடா நாடுகள் மீதும் பயங்கர தாக்குதல் நடத்தியது.

சர்வதேச அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய இந்த வளைகுடா போர் சுமார் 40 நாட்கள் நீடித்தது. பின்னர் இருதரப்பும் கடந்த மாதம் 8–ந்தேதி தற்காலிக போர் நிறுத்தம் அறிவித்தன. அது தற்போது வரை அமலில் இருக்கிறது. இந்த போர் ஈரான், லெபனான், இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகளில் சுமார் 6 ஆயிரம் பேரை பலி கொண்டது. தற்போது வளைகுடா பிராந்தியத்தில் போர் நிறுத்தம் அமலில் இருந்தா லும் பதற்றம் ஓயவில்லை. ஈரானின் கடற்பகுதியை அமெரிக்கா முற்றுகையிட்டு இருப்பதாலும், ஹார்முஸ் நீரிணையை ஈரான் மூடியிருப்பதாலும் அங்கே முழுமையான அமைதி ஏற்படவில்லை. மறுபுறம் ஈரான்–அமெரிக்கா இடையே நிரந்தர போர் நிறுத்தம் ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தம் ஏற்படுவதிலும் முட்டுக்கட்டை நீடிக்கிறது.

இதனால் எந்த நேரத்திலும் மீண்டும் போர் மூளலாம் என்ற அச்சம் வளைகுடா பிராந்தியம் மட்டுமின்றி சர்வதேச நாடுகள் மத்தியிலும் நிலவி வருகிறது. இதை மேலும் அதிகரிக்கும் வகையில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்பும், நேற்று முன்தினம் தனது சமூக வலைத் தளத்தில் மறைமுக மிரட்டல் ஒன்றையும் வெளியிட்டு இருந்தார்.

இந்த நிலையில், கத்தார், ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா தலைவர்களின் வேண்டுகோளை ஏற்று, ஈரான் மீது நாளை நடத்தவிருந்த தாக்குதலை நிறுத்திவிட்டதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார். ஈரானுடன் அமைதி ஒப்பந்தம் ஏற்பட தீவிர பேச்சுவார்த்தைகள் நடப்பதாகவும், இருப்பினும் அது தோல்வியடைந்தால் எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்த முழு தயார் நிலையில் இருப்பதாகவும் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நிறுத்தப்பட்ட தாக்குதல் குறித்த விவரங்களை அதிபர் டிரம்ப் தெரிவிக்கவில்லை. ஆனால் "ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு உடன்பாடு எட்டப்படாத பட்சத்தில், ஈரான் மீது ஒரு முழுமையான, பெரிய அளவிலான தாக்குதலை உடனடியாக தொடுக்க தயாராக இருக்குமாறு" அமெரிக்க ராணுவத்திற்கு அறிவுறுத்தியதாக டிரம்ப் கூறினார்.

## 'எல்லையை தகர்க்க முடியாத கோட்டையாக மாற்றுங்கள்' - ராணுவத்திற்கு உத்தரவிட்ட வடகொரிய அதிபர்!



பியாங்யாங், மே. 19–

கொரியப் போர் கடந்த 1953–ம் ஆண்டு தற்காலிகமாக முடிந்தாலும், சர்வ தேசச் சட்டப்படி இரு நாடுகளும் இன்னும் போரில்தான் நீடிக்கின்றன. இந்த சூழலில், தென் கொரியாவைத் தன் முதன்மை எதிரியாக அறிவித்துள்ள வடகொரியா, கடந்த மார்ச் முதலே எல்லையில் ராட்சத சுவர்களை எழுப்பி வந்தது.

இதன் தொடர்ச்சியாக, அதிபர் கிம் ஜாங் அன் தன் ராணுவ தளபதிகளின் அவசரக் கூட்டத்தைக் கூட்டினார். 2011–ல் அவர் பத வியேற்ற பிறகு நடந்த முதல் கூட்டுக்கூட்டம் இதுவாகும். கூட்டத்தில், தென் கொரியா எல்லையை யாரும் ஊடுருவ முடியாத "தகர்க்க முடியாத கோட்டையாக" மாற்ற கிம் ஜாங் அன் அதிரடி உத்தரவு பிறப்பித்தார். உக்ரைன் போரை மனதில் வைத்து, டிரோன் மற்றும் நவீனத் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப ராணுவப் பயிற்சிகளை மாற்றவும் அவர் ஆணையிட்டார். இதனால் எல்லையில் போர் மேகம் சூழ்ந்துள்ளது.

## பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங் வியட்நாம் பயணம்!



ஹனோய், மே. 19–

தென்கிழக்கு ஆசியாவில் அமைந்துள்ள நாடு வியட்நாம்.

இந்நாட்டின் ஜனாதிபதி டுலம் கடந்த 6ம் தேதி இந்தியாவுக்கு வருகை தந்தார். அவர் பிரதமர் மோடியை சந்தித்தார். இந்த சந்திப்பின்போது இரு தரப்பு உறவு, பாதுகாப்பு உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இந்நிலையில், அரசு முறை பயணமாக பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங் வியட்நாம் சென்றுள்ளார். இந்த பயணத்தின்போது வியநாட்நாம் பாதுகாப்புத்துறை மந்திரியை ராஜ்நாத் சிங் சந்திக்க உள்ளார். இந்த சந்திப்பின்போது இருநாட்டு உறவு, பாதுகாப்பு, ஆயுத விற்பனை உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடைபெற உள்ளது. மேலும், இந்தோ–பசுபிக் கடல் பகுதியில் இரு நாடுகளும் இணைந்து பாதுகாப்பு, நிலைத்தன்மையை மேம்படுத்துதல் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்தும் ஆலோசனை நடைபெற உள்ளது. வியட்நாம் பயணத்தை நிறைவு செய்யும் ராஜ்நாத் சிங் அங்கிருந்து தென்கொரியா செல்ல உள்ளார். தென்கொரிய பாதுகாப்புத்துறை மந்திரியை சந்திக்கும் அவர் பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்த உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழக முதல்மைச்சரின் தனிச்செயலர்களுக்கு துறைகள் ஒதுக்கீடு!




சென்னை, மே. 19–

தமிழ்நாடு முதல்வர் விஜயின் மூன்று தனிச்செயலாளர்களுககு அரசின் துறைகள் ஒதுக்கீடு செய்து அறிவிக்கப்பட்டு உள்ளது.இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாரணையில், "15–05–2026 தேதியிட்ட இந்த உத்தரவின்படி, முதலமைச்சரின் செயலாளர்கள் மற்றும் கூடுதல் செயலாளர்களுக்கு பல்வேறு துறைகள் பிரித்து ஒதுக்கப்பட்டுள்ளன.

டாக்டர் பி. செந்தில்குமார், ஐ.ஏ.எஸ்., கூடுதல் தலைமைச் செயலாளருக்கு நிதித் துறை, உள்துறை, மதுவிலக்கு மற்றும் கலால் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, எரிசக்தித் துறை, தொழில் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு துறை, நெடுஞ்சாலைத் துறை, சுகாதாரத் துறை, பொதுப்பணித் துறை உள்ளிட்ட முக்கிய துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஜி.லக்ஷ்மி பிரியா, ஐ.ஏ.எஸ்., 2வது செயலாளருக்கு முதலமைச்சர் அலுவலக பொது நிர்வாகம், அரசு நெறிமுறை, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, பள்ளிக் கல்வி, உயர்கல்வி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை, ஊரக வளர்ச்சி, சமூக நலன் மற்றும் பெண்கள் உரிமைத் துறை உள்ளிட்ட துறைகள் வழங்கப்பட்டுள்ளன. டாக்டர் ஏ. அண்ணாதுரை, ஐ.ஏ.எஸ்., 3வது செயலாளருக்கு இயற்கை வளங்கள், நீர்வளத் துறை, வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, கூட்டுறவு, சமூக சீர்திருத்தம், போக்குவரத்து, சட்டத்துறை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை ஆகிய துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. வி.விஷ்ணு, ஐ.ஏ.எஸ்., கூடுதல் செயலாளருக்கு வணிக வரித் துறை, சுற்றுலாத் துறை, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை உள்ளிட்ட பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உத்தரவு, 12–05–2026 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளதாக அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆன்லைன் மருந்து விற்பனையை தடை செய்ய

# 1.2 மில்லியன் மெடிக்கல் கடைகள் நாடு தழுவிய ஸ்டிரைக்.!

## மருந்துக்கடைகள் இயங்காது!!




புதுடெல்லி , மே. 19–

நாடு முழுவதும் உள்ள 1.2 மில்லியன் மெடிக்கல் கடைகள் மே 20 –ல்நாடு தழுவிய ஸ்டிரைக் அறிவித்துள்ளன. ஆன்லைன் மருந்து விற்பனையை தடை செய்ய வலியுறுத்தி இந்த ஸ்டிரைக் நடைபெற உள்ளது.

ஆன்லைன் மருந்து விற்பனையை எதிர்த்து மருந்தாளுநர்கள் (Pharma–cist) மற்றும் மருந்து விற்பனையாளர்கள் போராட்டத்தை அறிவித்து உள்ளனர். நாடு முழுவதும் நாளை 12.5 லட்சத்திற்கும் அதிகமான மருந்தகங்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட போவதாக அறிவிக்கப்பட்டு உள்ளது. அகில இந்திய மருந்தாளுநர்கள் மற்றும் மருந்து விற்பனையாளர்கள் அமைப்பால் (AIOCD) அறிவிக்கப்பட்டுள்ள இந்த வேலைநிறுத்தம், ஒழுங்குபடுத்தப்படாத ஆன்லைன் மருந்தகத் தளங்களின் வளர்ச்சி, பெருநிறுவன மின் – மருந்தகங்கள் வழங்கும் பெரும் தள்ளுபடிகள் மற்றும் குறிப்பிட்ட ஒழுங்குமுறைத் தளர்வுகளுக்கு எதிரான ஒரு போராட்டமாகும்.

முறையான மருந்துச் சீட்டு மற்றும் சரிபார்ப்பு இன்றி ஆன்லைனில் மருந்துகள் விற்கப்படுவதாகவும், ஆன்லைன் மூலம் மருத்துவர் பரிந்துரை சீட்டு இல்லாமல் வலி நிவாரணிகள், தூக்க மருந்துகள், மற்றும் கருக்கலைப்பு மருந்துகள் எளிதாகக் கிடைப்பதாகவும் குற்றம்சாட்டப்பட்டு உள்ளது. எனவே கொரோனா காலத்தில் தற்காலிகமாக கொண்டு வரப்பட்ட e–pharmacy செயல்பாட்டுக்கான அரசாணையை, ஒன்றிய அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என AIOCD அமைப்பு வலியுறுத்தி உள்ளது.

இந்த வேலைநிறுத்தம் காரணமாக, பல மாநிலங்களில் உள்ள பெரும்பாலான சுயாதீன, நேரடி மொத்த மற்றும் சில்லறை மருத்துவக் கடைகள் மூடப்பட்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளையில், மக்கள் மருந்தகங்கள் செயல்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மருத்துவமனையுடன் இணைக்கப்பட்ட மருந்தகங்கள், அவசர மருத்துவ சேவைகள், அரசாங்கத்தால் நடத்தப்படும் ஜன் அவுஷதி கடைகள் மற்றும் அம்ரித் மருந்தகங்கள் தொடர்ந்து செயல்படும்.

வேலைநிறுத்தத்தின் தாக்கம் மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பொது நலன் கருதி அத்தியாவசிய மருந்துகளுக்குத் தடையற்ற அணுகலை உறுதி செய்வதற்காக, பல மாநில அளவிலான சில்லறை மருந்தக சங்கங்கள் இந்த வேலைநிறுத்தத்திலிருந்து விலகியுள்ளன.

ஆன்லைன் மருந்து செயலிகள் மற்றும் தளங்கள் இந்த வேலைநிறுத்தத்தின் ஒரு பகுதியாக இல்லை; இருப்பினும், உள்ளூர் விநியோகச் சங்கிலியைப் பொறுத்து விநியோக நேரங்கள் மாறுபடலாம்.

இந்த ஸ்டிரைக் அறிவிப்பு காரணமாக தமிழகத்தில் சுமார் 42,000 மருந்தகங்கள் நாளை மூடப்படும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. மருந்தகங்களின் போராட்ட அறிவிப்பு காரணமாக ஏற்படும் இன்னல்களை சமாளிக்க அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைளை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

## அரசு ஊழியர்கள் லஞ்சம் கேட்டால்.. புகார் அளிப்பவர்களுக்கு ரூ.1 லட்சம் பரிசு!






சென்னை, மே. 19–

தமிழக அரசு வெளியிட்ட அறிக்கையில்,

எந்த அரசு துறையாக இருந்தாலும் உங்களிடம் 1000 ரூபாய் லஞ்சம் கேட்டால்கூட ஆதாரத்துடன் புகார் தெரிவிக்கலாம் புகார் அளிப்பவர்களுக்கு 1 லட்சம் ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகார் அளிக்க அழைக்கவும் 1800 425 1555 (24x7 கட்டணமில்லா எண்)

தமிழக அரசின் இந்த அதிரடி அறிவிப்பு சாமனிய மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இந்த அதிரடி அறிவிப்பால் லஞ்சம் கேட்கும் அரசு ஊழியர்கள் இடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

முதல்–அமைச்சர் விஜய் தானே ஒரு அரசு ஊழியரைப் போல உரிய நேரத்திற்கு அலுவலகம் வந்து பணியாற்றுவது அதிகாரிகள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. "மக்களின் பணத்தை நான் ஒரு பைசா கூட தொடமாட்டேன்" என்று உறுதியளித்துள்ள அவர், ஊழலற்ற வெளிப்படையான ஆட்சியை வழங்க இலக்கு வைத்துள்ளார்.

## தவெக அமைச்சரவையில் இணையும் 2 காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள்!




சென்னை, மே. 19–

சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் கட்சி மொத்தம் 5 தொகுதிகளில் வெற்றி பெற்றது. அந்த 5 எம்எல்ஏக்களில் இருவரை அமைச்சர்களாக தேர்வு செய்வது குறித்து தவெக தலைமை மற்றும் காங்கிரஸ் மேலிடம் இடையே ஆலோசனைகள் நடைபெற்றதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், தவெக அமைச்சரவையில் காங்கிரஸ் கட்சிக்கு 2 ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களில் கிள்ளியூர் எம்எல்ஏ ராஜேஷ்குமார் மற்றும் மேலூர் எம்.எல்.ஏ. விஸ்வநாதன் ஆகியோர் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 59 ஆண்டுகளுக்கு பிறகு அமைச்சரவையில் காங்கிரஸ் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மே 22-ம் தேதி முதலமைச்சர் விஜய் டெல்லி பயணம்!



சென்னை, மே. 19–

முதலமைச்சர் விஜய் 22ம் தேதி டெல்லி பயணம் செய்ய உள்ளார். அவர் பிரதமர் மோடியை சந்திக்கிறார். பிரதமர் மோடி தற்போது அரசு முறை பயணமாக வெளிநாட்டிற்கு சென்றுள்ளார். 22ம் தேதி நாடு திரும்புகிறார்.

இதையடுத்து அன்றைய தினமே பிரதமர் மோடியை விஜய் சந்திக்க உள்ளார். சந்திப்பின்போது தமிழக நலன் சார்ந்த திட்டங்களுக்கு நிதி கோர இருக்கிறார். மோடியை தொடர்ந்து காங்கிரஸ் தலைவர்களையும் விஜய் சந்திக்க உள்ளார். காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோரை சந்திக்க உள்ளார்.

தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 19.05.2026
விசுவாவசு தமிழ் வருடம்
வைகாசி மாதம் 05-ம் தேதி

## மனித குலத்திற்கு மிகப்பெரிய எச்சரிக்கை..!!

தற்போது ஏஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தான் உலகளவில் பேசப்படும் ஒரு விஷயம். இந்த தொழில்நுட்பம் நம் அன்றாட வாழ்க்கையின் அங்கமாகிவிட்டது. அதே வேளையில் பலரது வேலைக்கும் ஆப்பு வைத்து வருகிறது. உலக அளவில் இலட்சக்கணக்கான தொழிலாளர்களின் வேலைவாய்ப்புகளை பறித்து வருகிறது ஏஐ. பல்வேறு நிறுவனங்களில் நுழைவு நிலை வேலைகள் ,திரும்பத் திரும்ப ஒரே மாதிரியாக செய்யக்கூடிய வேலைகள் ,கோடிங், ஹெச் ஆர் உள்ளிட்டவை அனைத்தும் ஏஐ வசம் படிப்படியாக ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. இதனால் அதிகமாக பாதிக்கப்படுவது ஒயிட் காலர் எனப்படும் அலுவலகத்தில் அமர்ந்து பார்க்கக்கூடிய வேலைகள் தான். இந்த நிலையில் அடுத்த12 முதல் 18 மாதங்கள் தான் அனைவருக்கும் இருக்கக்கூடிய காலக்கெடு?பெரும்பாலான ஏஐ மாடல்கள் மனிதர்களுக்கு நிகராகவும் மனிதர்கள் விட இன்னும் திறமையாகவும் வேலைகளை முடித்துக் கொடுக்கும் அளவுக்கு வளர்ச்சி அடைந்து விட்டன.


எனவே ஒட்டுமொத்தமாகவே இந்த உலகம் முழுவதுமே அடுத்த ஓராண்டிலிருந்து ஒன்றரை ஆண்டு காலத்திற்குள் மிகப்பெரிய அளவில் வேலை வாய்ப்புத் துறையில் மாற்றத்தை காண்பார்கள்.பல்வேறு வேலைகள் தானியங்கி முறைக்கு மாற்றப்படும்,கணினி முன்பு அமர்ந்து பார்க்கும் வேலைகள் மனிதர்களுக்கு இனி இருக்காது.

மார்க்கெட்டிங் , லீகல் மற்றும் ப்ராஜெக்ட் மேனேஜ்மென்ட் உள்ளிட்ட வேலைகள் அடுத்தடுத்து ஏஐ வசம் செல்லும் கணினிகளின் திறன்கள் ஒவ்வொரு நொடியும் மேம்பட்டு வருகின்றன, நிறுவனங்களும் இனி ஏஐ மாடல்களுக்கு தான் முக்கியத்துவம் தருவார்கள்.

தற்போதைக்கு தொடக்க நிலையில் இருக்கக்கூடிய வேலைகள் தான் பறிபோகின்றன என நாம் பார்க்கிறோம் ஆனால் கூடிய விரைவில் சீனியர் லெவல் வேலைகளுக்கும் ஆள் தேவைப்படாது .மெடா, அமேசான், கூகுள் என உலகின் முன்னனி டெக் நிறுவனங்கள் ஏஐ தொழில்நுட்பத்தில் பெரிய அளவிலான முதலீடுகளை செய்துள்ளன. இதனை காரணமாக கூறியும் மனிதர்களை நீக்கி அந்த சம்பளத்தை கொண்டு ஏஐ தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும் நிறுவனங்கள் திட்டமிடுகின்றன. எனவே ஏஐ நுட்பத்தில் திறமையை வளர்த்து கொள்வது தான் எதிர்காலத்தில் வேலை வாய்ப்புகளை தக்க வைக்க உதவும். ப்ளூ காலர் வேலைகளுக்கு தற்போதைக்கு ஏஐ இடம் இருந்து ஆபத்து இல்லை. அதாவது மெக்கானிக், பிளம்பர் போன்ற வேலைகளுக்கு ஏஐ மூலம் சிக்கலே இல்லை.

## சினிமா துளிகள்..!

### இந்த ஆண்டில் மிகவும் எதிர்பார்க்கப்படும் திரைப்படங்கள்...!



**ஜன நாயகன்:**

தமிழ் சினிமாவின் உச்ச நடிகரான விஜய் நடித்துள்ள படம் 'ஜன நாயகன்'. இப்படம் விஜயின் கடைசி படம் என கூறப்பட்டதால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு மேலோங்கி இருந்தது. ஜனவரி மாதம் 9-ந்தேதி வெளியாக இருந்த 'ஜன நாயகன்' படத்திற்கு தணிக்கை சான்றிதழ் வழங்காதது, வழக்கு, தேர்தல், இணையத்தில் வெளியீடு என பல காரணங்களால் தற்போதுவரை படம் வெளியாகவில்லை.

இதையடுத்து விஜய் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ளதை தொடர்ந்து அவரது பெயரில் தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் என சேர்ப்பது உள்ளிட்ட பணிகள் நடைபெற்றது. இதனை தொடர்ந்து 'ஜன நாயகன்' எப்போது வெளியாகும் என்ற கேள்வி மேலோங்கி இருந்தது. இந்த நிலையில், விஜய் நடித்த 'ஜன நாயகன்' படம் விஜயின் பிறந்தநாளான ஜூன் மாதத்தில் வெளியிட திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

**ஜெயிலர் 2:**

நடிகர் ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகி வரும் படம் 'ஜெயிலர் 2'. நெல்சன் இயக்கியுள்ள இப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்த நிலையில் மற்ற பணிகள் நடைபெற்று வருகிறது. 'ஜெயிலர் 2' படத்தில், ரஜினிகாந்த் 'டைகர்' முத்துவேல் பாண்டியன் என்ற தனது கதாபாத்திரத்தில் மீண்டும் நடித்துள்ளார். அவருடன் அவரது மனைவியாக ரம்யா கிருஷ்ணன் நடித்துள்ளார். இந்தப் படத்தின் இரண்டாம் பாகத்தில் சிவராஜ்குமார் மற்றும் மோகன்லால் ஆகியோர் சிறப்பு கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். 'ஜெயிலர்2' படம் 12 ஜூலை மாதத்தில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**விஸ்வநாத் அண்ட் சன்ஸ்:**

நடிகர் சூர்யா மற்றும் மமிதா பைஜூ நடிப்பில் உருவாகி வரும் படம் விஸ்வநாத் அண்ட் சன்ஸ் (Vishwanath & Sons). வாத்தி, லக்கி பாஸ்கர் புகழ் உள்ளிட்ட படங்களை இயக்கிய வெங்கி அட்லூரி இப்படத்தை இயக்குகிறார். நாக வம்சி நிறுவனம் தயாரிப்பில் ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கும் இப்படத்தில் மமிதா பைஜூ, ராதிகா சரத்குமார், ரவீனா டாண்டன் உள்ளிட்ட பலர் நடித்து வருகின்றனர். இப்படம் ஆகஸ்ட் மாதத்தில் வெளியாகும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் தற்போது முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

**D55:**

ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் தனுஷ் நடிக்கும் 'D55' படத்தின் படப்பிடிப்பு பிப்ரவரி மாதம் தொடங்கியது. இப்படத்தில் தனுஷுக்கு ஜோடியாக சாய் பல்லவி நடிக்கிறார். மேலும், பழம்பெரும் நடிகர் மம்மூட்டி முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இப்படம் 'ரெட் ஜெயண்ட் மூவிஸ்' மற்றும் 'வுண்டர்பார் ஃபிலிம்ஸ்' தயாரிப்பில் உருவாகிறது. D55 படத்தின் தயாரிப்புப் பணிகள் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. இப்படம் அக்டோபர் மாதத்தில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அரசு பேருந்து ஓட்டுநர்கள் கைப்பேசி பயன்படுத்த தடை!



சென்னை, மே. 19–

ஓட்டுநர்கள் பணியின் போது கைப்பேசி பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. அரசு பேருந்து ஓட்டுநர்கள் சட்டைப் பையில் கைப்பேசி வைக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில்.

பேருந்து இயக்கத்தின் போது ஓட்டுநர்கள் கைபேசி வைத்திருக்க கூடாது மற்றும் உபயோகிப்படுத்தகூடாது என மேற்காணும் பார்வையில் கண்ட சுற்றறிக்கை வாயிலாக ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் ஒட்டுனர்கள் சட்டைப்பையில் கைபேசி வைத்திருப்பதாகவும் அவ்வப்போது பணியின் போது பயன்படுத்தி வருவதாகவும் பயணிகளிடமிருந்து தொடர்ந்து புகார்கள் பெறப்பட்டு வருகிறது.

இவ்வாறு ஒட்டுனர்கள் பணியின் போது கைபேசியை பயன்படுத்தி வருவதால் அவ்வப்போது உயிர் இழப்பு மற்றும் பெரிய விபத்துகளும் ஏற்பட்டு வருகிறது என்பது ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. எனவே ஒட்டுனர்கள் பணியின் போது கைபேசியை சட்டைப் பையில் வைத்திருப்பது மற்றும் பயன்படுத்துவது முற்றிலுமாக தடை செய்யப்படுகிறது

மேலும் பேருந்து நிலையம் மற்றும் வழித்தட ஆய்வின் போது ஒட்டுனர்கள் கைபேசி வைத்திருப்பது பயன்படுத்துவது கண்டறியப்பட்டால் ஒட்டுனர் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் சுற்றறிக்கை வாயிலாக மீண்டும் நினைவூட்டப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாநிலங்களவை முதல் எம்.பி. யார்? - முதல்வர் விஜய் தீவிர ஆலோசனை!



சென்னை, மே. 19–

தமிழக சட்டசபை தேர்தலில் முதல் முறையாக களம் கண்ட த.வெ.க. மகத்தான வெற்றியை பதிவு செய்தது. 108 இடங்களை கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. காங்கிரஸ், கம்யூனிஸ்டுகள், விடுதலை சிறுத்தைகள் ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் தமிழக முதல்–அமைச்சராக விஜய் பதவியேற்று இருக்கிறார். பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற முதல்–அமைச்சர் விஜய் திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துள்ளார். அந்த தொகுதிக்கு விரைவில் இடைத்தேர்தல் நடக்க உள்ளது. இடைத்தேர்தலில் யாரை நிறுத்துவது என்பது குறித்து முதல்–அமைச்சர் விஜய் ஆலோசனை நடத்தி வருகிறார்.

இதற்கிடையே, அ.தி.மு.க.வைச் சேர்ந்த சி.வி.சண்முகம் மயிலம் தொகுதியில் போட்டியிட்டி வெற்றி பெற்றதால், அவர் வகித்து வந்த மாநிலங்களவை எம்.பி. பதவியை ராஜினாமா செய்துள்ளார். எனவே அந்த இடம்காலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே அந்த ஒரு இடத்திற்கு மாநிலங்களவை எம்.பி.யை நியமனம் செய்ய விரைவில் அறிவிப்பு வெளியாக உள்ளது.

அந்த அறிவிப்பு வரும் பட்சத்தில், தமிழக சட்டசபையில் பெரும்பான்மையான எம்.எல்.ஏ.க்களை கொண்ட த.வெ.க.வுக்கு அந்த ஒரு உறுப்பினர் பதவி கிடைக்கும். அந்த வகையில், சட்டசபை தேர்தலில் வென்ற கையோடு ஒரு மாநிலங்களவை எம்.பி. பதவியையும் த.வெ.க. கைப்பற்ற உள்ளது. இந்த பதவி த.வெ.க. முக்கிய நிர்வாகி ஒருவருக்கு வழங்க முதல்–அமைச்சர் விஜய் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

த.வெ.க. முதல் எம்.பி. என்ற அடையாளத்துடன் அவர் டெல்லி செல்வார். அவர் யார்? என்பது தான் அரசியல் அரங்கில் கேள்வியாக எழுந்துள்ளது. மாநில அரசியலை தொடர்ந்து டெல்லி அரசியலிலும் த.வெ.க. தடம் பதிக்க உள்ளது.

## மோசடி புகார் வழக்கு: செந்தில் பாலாஜியிடம் விசாரணை நடத்த அனுமதி கோரி அமலாக்கத்துறை கடிதம்!



சென்னை, மே. 19–

2011 முதல் 2016 வரையிலான அதிமுக ஆட்சியில், போக்குவரத்து அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜி போக்குவரத்துத் துறையில் வாங்கித் தருவதாகக் கூறி பணம் பெற்றதாக குற்றம்சாட்டப்பட்டது. செந்தில் பாலாஜி, அவரது சகோதரர் அசோக் குமார் உள்ளிட்டோர் மீது பணமோசடி குற்றச்சாட்டின் பேரில் அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்தது.

பண மோசடி வழக்கில் செந்தில் பாலாஜி, அவரது தம்பி அசோக் குமார் உட்பட 4 பேர் மீது வழக்கு மாநில அரசு அனுமதி இல்லாததால் நீதிமன்ற விசாரணை இன்னும் தொடங்கவில்லை. இந்த நிலையில், போக்குவரத்துத்துறையில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி பணம் பெற்றதாக பதிவு செய்யப்பட்ட மோசடி வழக்கில், முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியை விசாரிக்க அனுமதி கோரி தமிழக அரசுக்கு அமலாக்கத்துறை கடிதம் அனுப்பியுள்ளது.

கடந்த 15–ம் தேதி அமலாக்கத்துறை சார்பில் 3 பக்க கடிதம் தலைமைச் செயலாளர் சாய் குமாருக்கு அனுப்பப்பட்டுள்ளது. கவர்னரிடம் அனுமதி கோரப்பட்ட நிலையில், மாநில அரசிடமே அனுமதி பெற வேண்டும் என்ற விதிகளின்படி தற்போது அனுமதி கேட்கப்பட்டுள்ளது.

புகார் தொடர்புடைய தகுந்த ஆதாரங்கள், ரகசிய விசாரணை குறிப்புகள், புகார் நகல் ஆகியவற்றை உள்ளடக்கிய பென் டிரைவை இணைத்து, தலைமைச் செயலாளர் சாய் குமாருக்கு அமலாக்கத்துறை கடிதம் அனுப்பியுள்ளது. இந்த கடிதம் தலைமைச் செயலாளர் அலுவலகத்தால் முறையாகப் பெறப்பட்டு, அதற்கான ஒப்புகை பெறப்பட்டதாக உறுதிசெய்யப்பட்டுள்ளது.

செந்தில்பாலாஜி ஆளும் கட்சி மற்றும் அமைச்சரவையில் உறுப்பினராக இருந்ததால், முந்தைய திமுக அரசு அனுமதி வழங்குவதில் தாமதம் செய்ததாக அமலாக்கத்துறை குற்றம் சாட்டியுள்ளது. நீதிமன்றம் முறையாக விசாரணையைத் தொடங்க ஏதுவாக, உடனடியாக ஒப்புதல் வழங்குமாறு தவெக தலைமையிலான மாநில அரசை அமலாக்கத்துறை தற்போது வலியுறுத்தியுள்ளது. செந்தில் பாலாஜி மீதான விசாரணைக்கு தவெக அரசு அனுமதி அளிக்குமா? என்ற கேள்வி அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## மீண்டும் ரூ.15 ஆயிரத்தை நெருங்கும் ஒரு கிராம் தங்கம் விலை...!




சென்னை, மே. 19–

சென்னையில் இன்று ஆபரணத் தங்கத்தின் விலை சற்று உயர்ந்துள்ளது. அதன்படி, தங்கம் கிராமுக்கு ரூ.120 அதிகரித்து ஒரு கிராம் ரூ.14.870–க்கும், சவரனுக்கு ரூ.960 அதிகரித்து ஒரு சவரன் ரூ.1.18. 960–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதன்மூலம் ஒருகிராம் தங்கம் விலை மீண்டும் 15 ஆயிரத்தை நெருங்குகிறது. இதனால் நகைப்பிரியர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இதைபோல வெள்ளி விலையில் மாற்றமில்லை. அதன்படி, ஒரு கிராம் வெள்ளி ரூ.300–க்கும், ஒரு கிலோ ரூ.3 லட்சத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.



## ஒரே ராசியில் பிறந்த இருவருக்கு இடையே திருமண பொருத்தம்?



மேஷம் முதல் மீனம் வரை உள்ள அனைத்து ராசியினரும் தனித்துவமான பண்புகளை கொண்டிருக்கும் நிலையில், ஒன்றுபோல் குணங்கள் – பண்புகளை கொண்டிருக்கும் இரு நபர்கள் (அதாவது, ஒரு ராசி கொண்ட இரு நபர்கள்) திருமணம் செய்தால், அவர்களின் வாழ்க்கை எப்படி இருக்கும்? மண வாழ்க்கை எப்படி அமையும்? என்பது குறித்து சற்று விரிவாக இங்கு காணலாம்!

**மேஷம் – வளர்ச்சி!**

மேஷ ராசியினர் அடிப்படையில் படைப்பாற்றல் கொண்டவர்கள். தங்கள் கலைத் திறமையை பயன்படுத்தி அடுத்தடுத்த கட்டத்திற்கு முன்னேறிச் செல்பவர்கள். அந்த வகையில் மேஷ ராசியில் பிறந்த இருவர் திருமணம் செய்யும் போது, ஒருவருக்கொருவர் பக்க பலமாக இருந்து, தொழில் வாழ்க்கை மற்றும் மண வாழ்க்கை இரண்டிலும் வளர்ச்சி கொண்டு வருவார்கள், மகிழ்ச்சி உண்டாக்குவார்கள்.

**ரிஷபம் – வெற்றிகரமான உறவு!**

ஒரே போன்ற குணங்களை கொண்ட ரிஷப ராயினர் இருவர் திருமணம் செய்யும் போது, அவர்களின் வாழ்க்கையில் போட்டிகளும், அதேநேரம் விட்டுக்கொடுத்துச் செல்வது போன்ற அழகிய தருணங்களும் அதிகரித்து காணப்படும். இவர்கள் உறவில் ஈகோ சண்டைகள், வாக்குவாதங்கள் இயல்பான ஒன்றாக இருக்கும் நிலையிலும், இப்பிரச்சனைகள் அனைத்தும் விரைவில் முடியும் ஒன்றாகவே இருக்கும். உறவில் மகிழ்ச்சியை கொண்டு வரும்.

**மிதுனம் – சிக்கல்!**

மிதுன ராசியில் பிறந்த இருவர் திருமண வாழ்க்கையில் இணைவது மகிழ்ச்சியான தருணங்களையும் அதேநேரம் சிக்கலான விஷயங்களையும் கொண்டு வருகிறது. பொழுதுபோக்கு, ஆடம்பரம் போன்ற விஷயங்களில் அதீத ஆர்வம் காட்டும் மினத ராசியினர் குடும்பத்தில் பொறுப்புகள் என வரும் போது என்ன செய்வது என தெரியாது தவிக்கின்றனர். சுருக்கமாக கூறினால், இவர்களின் காதல் வாழ்க்கை சிறப்பாக இருக்கும், திருமண வாழ்க்கை சவால்கள் நிறைந்திருக்கும்.

**கடகம் – சவால்கள் நிறைந்திருக்கும்!**

கடக ராசியினர் கருணை உள்ளம் கொண்டவர்கள், அதேநேரம் மற்றவர்களிடம் இருந்து அன்பை எதிர்பார்ப்பவர்கள். இவர்களின் எதிர்பார்ப்பு காரணமாக, மற்றொரு கடக ராசியினருடன் அவர்களுக்கு காதல் / திருமண வாழ்க்கை ஒத்துப்போவது கிடையாது. கடக ராசி கொண்ட இருவர் திருமணம் செய்வதை காட்டிலும், மற்றொரு ராசி கொண்டவருடன் திருமணம் செய்வதை நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்

**சிம்மம் – வாக்குவாதம்!**

ஆளுமை பண்புக்கு பெயர் சிம்ம ராசியினர், ஆதிக்கம் செலுத்த விரும்புகின்றனர். எதிலும் முன்னிலை பெற வேண்டும் என விரும்பும் இந்த சிம்ம ராசியினுக்கு, திருமண வாழ்க்கையில் மற்றொரு சிம்ம ராசி நபருடன் ஒத்துப்போவது கிடையாது. உறவில் அடிக்கடி பதற்றம், வாக்குவாதம், ஈகோ சண்டைகள் உண்டாகலாம். எனவே, எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது!

**கன்னி – இனிமை!**

ஆக்கப்பூர்மான சிந்தனைகள் கொண்ட கன்னி ராசியினர், அனைவருடனும் அன்பாக பழக கூடியவர்கள். தங்கள் குணத்திற்கு ஏற்ற வகையில் மற்றவர்களுடன் இணக்கமான ஒரு உறவை பராமரிக்கும் இவர்கள், கன்னி ராசி கொண்ட ஒருவரை திருமணம் செய்கையில் அவர்களின் வாழ்க்கை சிறப்பாகவும் – இனிமையான தருணங்கள் நிறைந்தும் காணப்படும் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

**துலாம் – நிறைவு!**

துலாம் ராசியில் பிறந்தவர்கள் தங்கள் வாழ்க்கை துணையின் விருப்பங்களை பூர்த்தி செய்ய எந்த ஒரு சவாலையும் சந்திக்க தயாராக இருப்பவர்கள். அந்த வகையில் துலாம் ராசியில் பிறந்த இருவர் திருமணம் செய்கையில், தம்பதியர் இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பதோடு, அடுத்தவர் விருப்பங்களை பூர்த்தி செய்ய கடுமையான முயற்சிகளை கையில் எடுத்து, உறவை மகிழ்ச்சியான பாதையில் அழைத்துச் செல்வார்கள்.

**விருச்சிகம் – யூகிக்க இயலாது!**

விருச்சிக ராசியினர் விரைவில் உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள். பாசம், கோபம் இரண்டையும் உடனடியாக வெளிக்காட்ட கூடியவர்கள். அந்த வகையில் விருச்சிக ராசி கொண்ட இருவர் திருமணம் செய்ய, அவர்கள் இடையே காணப்படும் உறவு மகிழ்ச்சியான தருணங்கள் கொண்டிருக்கலாம், அதேநேரம் சண்டைகள் – வாக்குவாதங்கள் என மோசமான தருணங்களையும் கொண்டிருக்கலாம். சூழ்நிலைக்கு ஏற்ப இவர்கள் இடையே உறவு ஊடலும் – கூடலும் கலந்து இருக்கும்!

**தனுசு – வேடிக்கை!**

சாகசம், வேடிக்கை குணத்திற்கு பெயர் பெற்ற தனுசு ராசியினர் இயல்பாகவே மற்றவர்களின் விருப்பங்களுக்கு மதிப்பு அளிப்பவர்கள். தனுசு ராசியில் பிறந்த இருவர் திருமணம் செய்துக்கொள்ள, அவர்களின் வாழ்க்கை மகிழ்ச்சியாகவும், இனிமையாகவும் பயணிக்கும். இருவரும் இணைந்து புதிய விஷயங்களை முயற்சிப்பார்கள். உறவில் இனிமையான தருணங்களை அதிகரிப்பார்கள்

**மகரம் – மோதல்!**

மகர ராசி கொண்டவர்கள் யதார்த்த வாழ்க்கைக்கு முன்னுரிமை அளிப்பவர், உயர்ந்த இலக்குகளை கொண்டவர்கள். மற்றவர்களுக்கு விட்டுக்கொடுக்கும் பழக்கம் இருக்கும் நிலையிலும், தங்கள் லட்சியங்களை மற்றவர்களுக்காக விட்டுக்கொடுக்கும் பழக்கம் இல்லை. அந்த வகையில் மகர ராசி கொண்ட இருவருக்கு இடையே காதலை காட்டிலும் மோதல் அதிகம் இருக்கும். இருப்பினும் இந்த மோதல்கள், விரைவில் தீரும் ஒரு விஷயமாகவே இருக்கும்!

**கும்பம் – தயக்கம்!**

கும்ப ராசியில் பிறந்தவர்கள் கூச்ச சுபாவம் கொண்டவர்கள். உறவை அடுத்த கட்டத்திற்கு கொண்டுச் செல்வது தொடர்பான முயற்சியில் தயக்கம் நீடிக்கும். அடுத்த அடியை எடுத்து வைப்பது என்பது இருவருக்கும் சிரமமான ஒரு விஷயமாக இருக்க, உறவில் புரிதலை கொண்டு வருவதும், மகிழ்ச்சியை கொண்டு வருவதும் சற்று கடினமான ஒரு விஷயமாகவே இருக்கும்.

**மீனம் – காதல்!**

மீன ராசியில் பிறந்த இருவர் காதல் உறவில் இணைய, அவர்கள் இருவருக்கும் இடையே உறவுக்கு சிறப்பாக இருக்கும். ஒருவரின் விருப்பத்தை பூர்த்தி செய்ய அடுத்தவர், அதிகம் மெனக்கெடுவார்கள். அளவு கடந்த அன்பை வெளிப்படுத்துவார்கள், தங்கள் இருவருக்கும் இடையே காணப்படும் பொதுவான விருப்பங்களை கண்டறிந்து, அதனை நோக்கி பயணித்து சிறப்பான ஒரு மண வாழ்க்கையை அமைப்பார்கள்.

## ஆதார் அட்டையை இலவசமாக புதுப்பிக்க கால அவகாசம் நீட்டிப்பு!




புதுடெல்லி, மே. 19–

ஆதார் அட்டையில் உள்ள விவரங்களை இலவசமாக புதுப்பிக்கும் வசதிக்கான கால அவகாசத்தை மத்திய அரசு மேலும் ஒரு ஆண்டுக்கு நீட்டித்துள்ளது. இதன்படி, பொதுமக்கள் தங்களது பெயர், முகவரி, பிறந்த தேதி, பாலினம் உள்ளிட்ட விவரங்களில் மாற்றம் இருந்தால், மை ஆதார் இணையதளம் மூலம் ஆன்லைனில் இலவசமாக புதுப்பித்து கொள்ளலாம்.


முன்னதாக இந்த சலுகை வரும் ஜூன் மாதத்துடன் முடிவடைய இருந்த நிலையில், தற்போது அது 2027 ஜூன் 14 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன்பு ஆதார் எடுத்து இதுவரை எந்த மாற்றமும் செய்யாதவர்கள், தங்களது ஆவணங்களை புதுப்பிக்குமாறு யுஐடிஏஐ தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

ஆன்லைன் மூலம் புதுப்பிப்பதற்கு எந்த கட்டணமும் வசூலிக்கப்படாது. ஆனால் ஆதார் சேவை மையங்களுக்கு நேரில் சென்று விவரங்களை மாற்ற விரும்புவோர் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்த வேண்டும். மக்களின் ஆதார் தகவல்கள் துல்லியமாகவும் புதுப்பித்த நிலையிலும் இருக்க வேண்டும் என்பத ற்காக இந்த கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## நீங்கள் இரவு முழுவதும் மொபைல் போனை பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? ஆபத்து?



இந்த அதிநவீன காலக்கட்டத்தில், மொபைல் போன்கள், மடிக்கணினிகள் மற்றும் தொலைக்காட்சிகள் இல்லாமல் வாழ்க்கையை நினைத்துக்கூடப் பார்க்க இயலாத நிலை உருவாகிவிட்டது. காலையில் கண் விழித்த உடனேயே அலைபேசியைப் பார்க்கும் பழக்கம் பலரிடம் உள்ளது. வேலை, படிப்பு, பொழுதுபோக்கு, சமூக ஊடகங்கள் என அனைத்தும் இப்போது திரைகளின் வாயிலாகவே நடைபெறுகின்றன. ஆனால், திரைகளுக்கு முன்னால் மணிக்கணக்கில் நேரத்தைச் செலவிடுவது உடலை, குறிப்பாக மூளை மற்றும் கண்களைப் பெரிதும் பாதிக்கிறது. பலர் நள்ளிரவு வரையிலும் தங்கள் அலைபேசிகளைப் பயன்படுத்துகின்றனர். அதன் விளைவாக, தூக்கம் வராமல் தவிப்பதும், காலையில் எழுந்ததும் சோர்வாக உணர்வதும் இப்போது சாதாரணமாகிவிட்டது.

மருத்துவர்களின் கூற்றுப்படி, அலைபேசி மற்றும் மடிக்கணினித் திரைகளிலிருந்து வெளிவரும் 'நீல ஒளி' (Blue light), உடலின் இயல்பான தூக்கச் சுழற்சியைக் குலைக்கிறது. பொதுவாக, இரவில் உடல் 'மெலடோனின்' (Melatonin) எனும் ஹார்மோனைச் சுரக்கிறது. இது நாம் உறங்கச் செல்ல உதவுகிறது. ஆனால், உறங்கச் செல்வதற்கு முன் நீண்ட நேரம் திரையைப் பார்த்துக்கொண்டிருந்தால், மூளை அதை இன்னும் பகல் பொழுதாகவே கருதுகிறது. இதனால் மெலடோனின் சுரப்பு குறைகிறது. இதன் விளைவாக, நாம் தாமதமாக உறங்கச் செல்கிறோம் அல்லது தூக்கத்தின் இடையே பலமுறை விழித்துக்கொள்கிறோம்.

போதுமான தூக்கம் இல்லாவிட்டால், உடலுக்கு முழுமையான ஓய்வு கிடைப்பதில்லை. இதன் விளைவுகள் மறுநாளே தெளிவாகத் தென்படுகின்றன. தலைவலி, கண்களில் எரிச்சல், எரிச்சல் உணர்வு, மன அழுத்தம் மற்றும் கவனக்குறைவு போன்ற பிரச்சனைகள் தலைதூக்குகின்றன. சிலர் நாள் முழுவதும் சோர்வாகவே உணர்கின்றனர். வேலையில் செலுத்தும் கவனம் குறைகிறது. அலுவலகத்திலோ அல்லது படிப்பிலோ செயல்திறன் குறைவதற்கான வாய்ப்புகளும் அதிகரிக்கின்றன. இப்படியே நீண்ட காலத்திற்குத் தொடர்ந்தால், கண்களுக்குக் கீழே கருவளையங்கள் தோன்றுவது, மன உளைச்சல் மற்றும் பதற்றம் போன்ற பிரச்சனைகள் தீவிரமடைகின்றன.

தூக்கச் சுழற்சியில் ஏற்படும் நீண்டகாலக் கோளாறுகள் இதய ஆரோக்கியம், மூளையின் செயல்பாடு மற்றும் மனநலம் ஆகியவற்றைக் கூடப் பாதிக்கக்கூடும் என்று வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர். சிலருக்கு, இரவில் அலைபேசியை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவதால், காலையில் கண் விழிப்பது மிகவும் கடினமாகிவிடுகிறது. இது அவர்களின் அன்றாட வாழ்க்கை முறையையே முழுமையாக மாற்றியமைத்துவிடுகிறது.

இந்தப் பிரச்சனையிலிருந்து விடுபட, நீங்கள் சில சிறிய பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். உறங்கச் செல்வதற்குக் குறைந்தது ஒரு மணி நேரத்திற்கு முன்பே அலைபேசிகள் மற்றும் மடிக்கணினிகளை ஒதுக்கி வைத்து விடுங்கள். இரவில் விளக்குகளை மங்கலாக எரியவிடுவது சிறந்தது. சமூக ஊடகங்களில் தேவையில்லாமல் நேரத்தைச் செலவிடுவதைக் குறைத்துக்கொள்ளுங்கள். நாள் முழுவதும் திரைக்கு முன்னாலேயே அமர்ந்து வேலை செய்பவர்கள், ஒவ்வொரு 20 முதல் 30 நிமிடங்களுக்கும் ஒருமுறை தங்கள் கண்களுக்குச் சிறிது ஓய்வு அளிப்பது அவசியம்.

உறங்குவதற்கு முன் புத்தகம் வாசித்தல், மெல்லிய இசையைக் கேட்டல் மற்றும் குடும்பத்தினருடன் உரையாடுதல் போன்ற பழக்கங்கள் மனதை அமைதிப்படுத்த உதவும். நல்ல ஆரோக்கியத்திற்கு, ஒரு நாளைக்குக் குறைந்தது 7 முதல் 8 மணிநேரத் தூக்கம் மிகவும் அவசியமாகும். அதனால்தான், ஆரோக்கியமான வாழ்விற்குத் திரையில் செலவிடும் நேரத்தைக் குறைப்பதும், தூக்கத்தை மேம்படுத்துவதும் மிக முக்கியமாகும்.

# பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் பாராட்டு!



சோழவந்தான், மே 19–

மதுரை மாவட்டம் சோழவந்தானில் நகர அரிமா சங்க வரலாற்றில் முதல்முறையாக மூன்றாவது முறையாக தேர்வு செய்யப்பட்ட தொழிலதிபர் எம் வி எம் கலைவாணி மெட்ரிக் பள்ளி தாளாளர் தொழிலதிபர் டாக்டர் எம் மருது பாண்டியன் அவர்களுக்கு பல்வேறு தரப்பினர் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். இதுவரை இல்லாத வகையில் மூன்றாவது முறையாக அவரது பொது சேவையை பாராட்டி நகர அரிமா சங்கம் தலைவராக ஏக மனதாக தேர்ந்தெடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

எம் மருதுபாண்டியன் கல்விச் சேவையிலும் சமூக சேவையிலும் மிகுந்த அக்கறை கொண்டவர் அவரது நற்பண்பை பாராட்டி அரிமா சங்கம் அவருக்கு மூன்றாவது முறையாக தலைவராக செயல்படும் வாய்ப்பினை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது மூன்றாவது முறையாக சோழவந்தான்நகர அரிமாசங்கத்தலைவராகதேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எம் மருது பாண்டியனுக்கு அரசியல் பிரமுகர்கள் தொழில் அதிபர்கள் சமூக ஆர்வலர்கள் ஆன்மீக அன்பர்கள் ஆசிரியர்கள் தங்க நகை அடகு கடை உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகள் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்

# திருப்பதி: விரைவு தரிசனம் செய்ய சூப்பர் வாய்ப்பு..!



திருப்பதி,மே. 19–

ஆந்திர மாநிலம் திருப்பதி உள்ள ஏழுமலையான் கோயில் அறிவிப்பு வெளியாகி உள்ளது. ஆகஸ்ட் மாதம் ரூ.300 தரிசன டிக்கெட், விஐபி தரிசன டிக்கெட் வெளியீடு தேதி வெளியாகி உள்ளது. ஆகஸ்ட் மாதம் திருப்பதி செல்பவர்களுக்கு முக்கிய அறிவிப்பு:

திருப்பதிக்கு ஆகஸ்ட் மாதம் செல்பவர்கள் இந்த தேதிகளை நோட் செய்து கொள்ளுங்கள்.

அதன்படி, ஸ்ரீவானி விஜபி தரிசன டிக்கெட்டுகள் மே 23ஆம் தேதி ஆன்லைனில் வெளியிடப்படும் என தகவல் வெளியாகி உள்ளது. மே 23ஆம் தேதி 11 மணியளவில் ரூ.10,500 செலுத்தி விஜபி தரிசன டிக்கெட்டுகளை பெறலாம்.

மேலும், ஆகஸ்ட் மாதத்திற்கான ரூ.300 சிறப்பு தரிசன டிக்கெட்டுகள் மே 25ஆம் தேதி மாலை 3.00 மணிக்கு வெளியிடப்படும். மே 25ஆம் தேதி காலை 10 மணிக்கு சிறப்பு தரிசன டிக்கெட்டுகள் வெளியாகும். மேலும், தங்குமிடத்திற்கான டிக்கெட்டுளை மே 25ஆம் தேதி மாலை 3 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படும்.

மேலும், அர்ஜித் சேவை டிக்கெட்டுகளான சுப்ரபாதம், தோமாலா, அர்ச்சனை, அஷ்டதள பாதபத்மாராதனை சேவை டிக்கெட்டுகள் வரும் மே 18ஆம் தேதி காலை 10 மணிக்கு வெளியிடப்படும். இந்த சேவை டிக்கெட்டுகளுக்கான எலக்ட்ரானிக் டிப் முறை மே 20ஆம் தேதி காலை 10 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படும். மே 20 முதல் மே 22ஆம் தேதி மதியம் 12 மணி வரை கட்டண செலுத்துபவர்களுக்கு டிக்கெட்டுகள் ஒதுக்கப்படும். கல்யாண உற்சவம், ஊஞ்சல் சேவை, ஆர்ஜித பிரம்மோற்சவம், சகஸ்ர தீப அலங்கார சேவை டிக்கெட்டுகளுக்கான ஆன்லைன் டிக்கெட் மே 21ஆம் தேதி காலை 10 மணிக்கு வெளி யிடப்படும் என தேவஸ்தானம் தெரிவித்துள்ளது. திருப்பதி மற்றும் திருப்பதியில் தங்கும் வசதிக்கான கோட்டா மே 25ஆம் தேதி மாலை 3 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இம்ரான் கான் ஆட்சியை கவிழ்க்க அமெரிக்கா சதி?



வாஷிங்டன், மே. 19–

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், தாம் பதவியிலிருந்து நீக்கப்பட்டதற்குப் பின்னால் வெளிநாட்டுச் சதி இருப்பதாகத் தொடர்ந்து குற்றச்சாட்டுகளை கூறி வந்தார். இதற்கு வலுச் சேர்க்கும் விதமாக, ரகசிய அரசு தூதரக ஆவணம் ஒன்றுதற்போது கசிந்துள்ளது பாகிஸ்தானில் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

'சைபர்' என்று அழைக்கப்படும் இந்த ஆவணம், மார்ச் 2022–ல் அமெரிக்காவுக்கான அப்போதைய பாகிஸ்தான் தூதர் ஆசாத் மஜீத் கான் மற்றும் அமெரிக்க தூதர் டொனால்டு லூ ஆகியோருக்கு இடையே நடைபெற்ற உரையாடலை விவரிக்கிறது. இந்த உரையாடல்தான் இம்ரான் கானின் ஆட்சி கவிழ்ப்புக்கும், அவரது தற்போதைய சிறைவாசத்திற்கும் வழிவகுத்ததாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த புலனாய்வு ஊடகமான டிராப் சைட், 'கேபிள் ஐ–0678' (cable I–0678) என அடையாளம் கொண்ட இந்த அசல் ஆவணத்தை வெளியிட்டுள்ளது. உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பில் பாகிஸ்தான் நடுநிலை வகித்ததால் ஜோ பைடன் அதிருப்தியடைந்தார். இதையடுத்து தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை மூலம், மார்ச் 7, 2022–ல் நடைபெற்ற சந்திப்பின்போது, இம்ரான் கானைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்குமாறு வற்புறுத்தியுள்ளதை அந்த ஆவணம் சுட்டிக்காட்டுகிறது.

மேலும், ஆப்கானிஸ்தானுக்கு எதிராகத் தனது ராணுவத் தளங்களை அமெரிக்கப் படைகள் பயன்படுத்த இம்ரான் கான் அனுமதிக்காததும் அமெரிக்காவுக்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சுற்றுலா தலங்களில் குதிரை சவாரிக்கு கட்டுப்பாடுகள்!




சென்னை, மே. 19–

கடற்கரை, ஊட்டி, கொடைக்கானல் உள்ளிட்ட சுற்றுலா தலங்களில் குதிரை சவாரிக்கு கடும் கட்டுப்பாடுகள் விதித்து, தமிழக கால்நடை பராமரிப்புத்துறை உத்தரவிட்டுள்ளது.


தமிழக கால்நடை பராமரிப்புத்துறை பிறப்பித்துள்ள உத்தரவு: சென்னையில் குதிரைகளுக்கு கிளண்டர்ஸ் பாக்டீரியா தொற்று பரவல் எதிரொலி காரணமாக, குதிரை சவாரிக்கு உடல் நலக்குறைவாக உள்ள குதிரைகளை பயன்படுத்த வேண்டாம்.

குதிரைக்கு காய்ச்சல், இரும்மல், மூக்கில் சளி வடிதல், தோல் புண்கள், சுவாசக் குறைவு போன்ற அறிகுறிகள் தென்பட்டால் அந்த குதிரைகளை சவாரிக்கு உரிமையாளர்கள் அனுமதிக்கக் கூடாது. குதிரைகளின் தேவையற்ற போக்குவரத்தை தவிர்க்க வேண்டும்.

நோயுற்ற குதிரைகளை தனிமைப்படுத்த வேண்டும். குதிரை இருப்பிடங்கள் மற்றும் உபகரணங்களை முறையாக சுத்தம் செய்து கிருமி நாசினி மூலம் தூய்மைப்படுத்த வேண்டும்.

சென்னை உள்ளிட்ட பல கடற்கரைகளில் குதிரை சவாரி ஈடுபடுபவர்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. மேலும், ஊட்டி, கொடைக்கானல் உள்ளிட்ட சுற்றுலா தளங்களிலும் குதிரை சவாரியில் ஈடுபடுபவர்கள் முறையாக வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி சவாரி மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக முதல்–அமைச்சர், அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்களுக்கு சம்பளம் எவ்வளவு?



சென்னை, மே. 19–

தமிழ்நாட்டில் புதிதாக பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசில் முதல்–அமைச்சர், அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்களுக்கு எவ்வளவு சம்பளம் என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

தமிழ்நாட்டில் ரூ.25 ஆயிரமாக இருந்த எம்.எல்.ஏ.க்களின் மாத ஊதியம் கடந்த 2008–ம் ஆண்டு ரூ.30 ஆயிரமாக உயர்த்தப்பட்டது. அதற்கு அடுத்த ஆண்டே (2009) ரூ.30 ஆயிரத்தில் இருந்து ரூ.50 ஆயிரமாகவும், 2011–ம் ஆண்டு ரூ.50 ஆயிரத்தில் இருந்து ரூ.55 ஆயிரமாகவும் அதிகரிக்கப்பட்டது.

### விதிகளில் திருத்தம்

இந்த நிலையில், 2017–ம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் முதல்–அமைச்சராக இருந்த எடப்பாடி பழனிசாமி, எம்.எல்.ஏ.க்கள் சம்பளத்தை ரூ.55 ஆயிரத்தில் இருந்து ரூ.1 லட்சத்து 5 ஆயிரமாக அதிரடியாக உயர்த்தினார். அதுதான் இன்று வரை நடைமுறையில் இருக்கிறது.

எம்.எல்.ஏ.க்கள் ஊதியம் தொடர்பான விதிகள், கடந்த 2024–ம் ஆண்டு மே மாதம் 21–ந் தேதி திருத்தப்பட்டது. இந்த விதிகளின்படி முதல்–அமைச்சர், துணை முதல்–அமைச்சர், சபாநாயகர், துணை சபாநாயகர், அமைச்சர்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்களுக்கு அடிப்படை சம்பளம் ரூ.30 ஆயிரம்தான். இதுபோக, படித்தொகைகள் மற்றும் கூடுதலாக சில சலுகைகள் வழங்கப்படுகின்றன. அதைப் பொறுத்து மாத ஊதியம் மாறுபடும்.

### முதல்–அமைச்சருக்கு சம்பளம் இவ்வளவா?

முதல்–அமைச்சரின் மாத சம்பளம் ரூ.2 லட்சத்து 5 ஆயிரம் ஆகும். இதுபோக, அரசு வீடு, கார், பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும். இதேபோல், சபாநாயகர், துணை சபாநாயகர், அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்களின் மாத சம்பளம் ரூ.1 லட்சத்து 5 ஆயிரம் ஆகும். அதே நேரத்தில், அமைச்சர்களுக்கு அரசு வீடு, கார் கூடுதலாக வழங்கப்படும்.

மேலும், மாத சம்பளம் ரூ.1 லட்சத்து 5 ஆயிரத்தில், மாதாந்திரப் படி ரூ.10 ஆயிரம், தொகுதிப்படி ரூ.25 ஆயிரம், அஞ்சல்படி ரூ.2,500, தொலைபேசிப்படி ரூ.7,500, தொகுப்புப்படி ரூ.5 ஆயிரம், வாகனப்படி ரூ.25 ஆயிரம் ஆகியவை உள்ளடக்கம்.

### சலுகைகளும் ஏராளம்

இவை தவிர, எம்.எல்.ஏ.க்களுக்கு பல சலுகைகளும் உள்ளன. ஒவ்வொரு எம்.எல்.ஏ.வுக்கும் இலவச மருத்துவ வசதி, பயணம் செய்வதற்கு விமானம், ரெயில், பஸ் டிக்கெட் இலவசமாக வழங்கப்படும். மேலும், எம்.எல்.ஏ.க்கள் தங்களுக்கான ஒரு அலுவலகத்தை நிர்வகிக்கலாம். தேவைப்பட்டால் ஒரு நபரை வேலைக்கு அமர்த்தலாம். அதற்கான சம்பளத்தையும் எம்.எல்.ஏ.க்களுக்கு தனியாக வழங்கப்படும்.

இதுதவிர, சட்டமன்ற கூட்டத்தொடர் அல்லது துறை சார்ந்த கூட்டங்களில் கலந்துகொள்ளும் நாட்களுக்கு என தினசரி படியாக தலா ரூ.2,500 வரை தனியாக கணக்கிடப்பட்டு வழங்கப்படும்.

# எடப்பாடி / சி.வி.சண்முகம் தனித்தனியாக ஆலோசனை!



சென்னை, மே. 19–

பசுமை வழிச்சாலை இல்லத்தில் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடக்கவிருந்த நிலையில் அதிமுக தலைமை அலுவலகத்தில் மாவட்ட செயலாளர்களுடன் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்தி வருகிறார். முன்னதாக அதிமுக தலைமை அலுவலகத்தில் உள்ள எம்.ஜி.ஆர், ஜெயலலிதா சிலைகளுக்கு பழனிசாமி மரியாதை செலுத்தினார்.

அதிமுக இரண்டு பிரிவுகளாக உள்ள நிலையில் மாவட்ட செயலாளர்களுடன் எடப்பாடி பழனிசாமி ஆலோசித்து வருகிறார். தவெக அரசுக்கு சி.வி. சண்முகம், எஸ்.பி.வேலுமணி தரப்பு ஆதரவளிக்கும் சூழலில் அடுத்தது என்ன? என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதே போல் சி.வி. சண்முகம் 26 எம்.எல்.ஏ.க்களுடன் தனியாக ஆலோசனை நடத்தினார்.

# வேலை வாய்ப்பு

## AAI சரக்கு போக்குவரத்து மற்றும் தொடர்புடைய சேவைகள் நிறுவனம் ; 158 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: AAICLAS AAI கார்கோ லாஜிஸ்டிக்ஸ் அண்ட் அலைடு சர்வீசஸ் கம்பெனி லிமிடெட்

அறிவிப்பு எண்: 01/2026

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிலையான கால ஒப்பந்த அடிப்படையில்

கால அளவு: 03 ஆண்டுகள்

மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 158 பாதுகாப்பு பரிசோதகர் (புதியவர்) பணியிடங்கள்


பணியிடங்கள்: திருச்சி, கோழிக்கோடு, உதய்பூர், பாட்னா, கொல்கத்தா மற்றும் டேராடூன்

தொடங்கும் தேதி: 18.05.2026

கடைசி தேதி: 08.06.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.aaiclas.aero/



கும்பக்கரை அருவியில் குளிக்க அனுமதி, வனத்துறை தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தேவதானப்பட்டி வனச்சரகத்திற்குட்பட்ட கும்பக்கரை அருவியின் தண்ணீர் ஆதாரமான வட்டக்கானல், பாம்பார் ஆறு, வெள்ளகவி சுற்றுவட்டார மலைப்பகுதியில் பெய்ந்த மழையால் தண்ணீர் வரத்தை தொடர்ந்து சுற்றுலா பயணிகள் அருவியில் குளிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

# சோழவந்தான் அ/மி ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் வைகாசி பெருந்திருவிழா!



சோழவந்தான், மே. 19–

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருள்மிகு ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் கோவில் வைகாசி பெருந்திருவிழா பிரசித்தி பெற்றது தமிழகத்தில் உள்ள முக்கிய கோவில்களில் சோழவந்தான் ஜெனகை மாரியம்மன் வைகாசி பெருந்திருவிழா சிறப்பு மிக்கது. இந்த ஆண்டுக்கான வைகாசி பெருந்திருவிழா திங்கள் இரவு கொடியேற்றத்துடன் தொடங்கியது விழா ஏற்பாடுகளை திருக்கோவில் நிர்வாக அதிகாரி ராஜா தக்கார் சங்கரேஸ்வரி கணக்கர் பூபதி ஆலய பணியாளர்கள் கவிதா வசந்த் சுபாஷினி பெருமாள்மற்றும் பக்தர்கள் செய்தனர் இதில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் எம் வி கருப்பையா பேரூராட்சி மன்ற தலைவர் ஜெயராமன் வாடிப்பட்டி பேரூராட்சி மன்ற தலைவர் பால்பாண்டியன் முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர் கி ரு ஷ் ண வே ணி பால்பாண்டியன் திமுக பேரூர் செயலாளர் வழக்கறிஞர் சத்திய பிரகாஷ் பொதுக்குழு உறுப்பினர் ஸ்ரீதர் கவுன்சிலர் கொத்தாலம் செந்தில் வேல் மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர் பாதுகாப்பு ஏற்பாடுகளை சோழவந்தான் போலீசார் செய்திருந்தனர் வருகின்ற 26 ஆம் தேதி பால்குடம் அக்னி சட்டி நிகழ்ச்சியும் 27 ஆம் தேதி சோழவந்தான் மந்தை களத்தில் பூக்குழி இறங்கும் நிகழ்ச்சியும் ஜூன்

2 ஆம் தேதி தேரோட்டம் நிகழ்ச்சியும் 3ந் தேதி தீர்த்தவாரி நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881



# பதிலளிக்காமல் சென்ற மோடி.. விமர்சித்த நார்வே பத்திரிகையாளர்!



புதுடெல்லி, மே. 19– 6 நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டால் பிரதமர் மோடி, அமீரகம், நெதர்லாந்து, ஸ்வீடன் பயணத்தை முடித்துக்கொண்டு தற்போது நார்வே நாட்டுக்கு சென்றுள்ளார்.

நேற்று பிரதமர் மோடி மற்றும் நார்வே பிரதமர் ஜோனாஸ் கார் ஸ்டோர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திவிட்டு ஒஸ்லோவில் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். மோடி தனது உரையை வாசித்துவிட்டு வாசித்துவிட்டு கிளம்ப தயாராகினர்.

அப்போது நார்வேவை சேர்ந்த இளம் பெண் பத்திரிகையாளர் ஹெல்லே லிங் பிரதமர் மோடியிடம் திடீரென கேள்வி ஒன்றை எழுப்பினார்.

அதவாது,"பிரதமர் மோடி, உலகின் மிகவும் சுதந்திரமான ஊடகங்களிடம் நீங்கள் ஏன் சில கேள்விகளுக்குப் பதிலளிக்க மறுக்கிறீர்கள்?" என்று கேட்டார். ஆனால் மோடி அதற்கும் பதிலளிக்காமல் வெளியேறினார்.

இந்தச் சம்பவத்தை வீடியோவாகப் பகிர்ந்த ஹெல்லே லிங், "உலகப் பத்திரிகை சுதந்திரக் குறியீட்டில் நார்வே முதலிடத்தில் உள்ளது, ஆனால் இந்தியா 157வது இடத்தில் உள்ளது. பாலஸ்தீனம், அமீரகம் மற்றும் கியூபா ஆகிய நாடுகளுடன் இந்தியா பின்தங்கியுள்ளது" என்று சுட்டிக்காட்டினார்.

மேலும் "அதிகாரத்தில் இருப்பவர்கள் என் கேள்விக்கு நேரடியாகப் பதிலளிக்கவில்லை என்றால், நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்பேன். அதுதான் எனது வேலை. எனக்குப் பதில்கள் தேவை, வெறும் மேடைப் பேச்சுகள் மட்டும் போதாது" என்று தெரிவித்தார்.

இதையடுத்து ஒஸ்லோவில் உள்ள இந்திய தூதரகம் பிரதிநிதிகள் பங்கேற்கும் பத்திரிகையாளர் மாநாட்டிக்கு அழைப்பு விடுத்தது.

அழைப்பு ஏற்று அங்கு சென்ற ஹெல்லே லிங், மேற்கு நாடுகளுக்கான இந்திய தூதர் சிபி ஜார்ஜிடம், இந்தியாவில் மக்களுக்கு உள்ள ஜனநாயக உரிமைகள் மற்றும் சுதந்திரம் குறித்து காரசாரமான கேள்விகளை எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த ஜார்ஜ், சில அலட்சியமான தன்னார்வ அமைப்புகளின் அறிக்கைகளை இந்தியாவை புரிந்துகொள்ள முயற்சிக்க கூடாது.

இந்தியாவில் தினம் தினம் பல முக்கிய செய்திகள் வருகின்றன. அவற்றை எல்லாம் புறந்தள்ளிவிட்டு சில என்ஜிஓக்கள் கவனம் இன்றி தயாரித்த ஓரிரண்டு அறிக்கைகளை நம்பி நீங்கள் விமர்சிக்கிறீர்கள் என தெரிவித்தார்.

இதனிடையே ஹெல்லே லிங் ஒரு வெளிநாட்டு உளவாளி என்றும் வெளிநாட்டு அமைப்புகளிடம் பணம் வாங்கிவிட்டு இவ்வாறு பேசுகிறார் என்றும் இந்தியாவில் சமூக வலைத்தளங்களில் விமர்சிக்கப்பட்டது.

இதற்கு தனது எக்ஸ் பக்கத்தில் பதிலடி கொடுத்துள்ள ஹெல்லே லிங், "நான் எந்தவிதமான வெளிநாட்டு உளவாளியும் அல்ல. எந்தவொரு வெளிநாட்டு அரசாங்கத்தாலும் அனுப்பப்பட்டவள் அல்ல.

இதைப் பதிவிட நேரிடும் என்று நான் நினைக்கவில்லை. இதழியல் என்பதே சில நேரங்களில் நேருக்கு நேர் கேள்வி கேட்பதுதான்" என்று திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, "உலகின் முன்னால் ஒரு பிரதமர் பதறிப்போய், சில கேள்விகளுக்குப் பதிலளிக்காமல் ஓடுவது இந்தியாவின் பிம்பத்திற்கு என்னவாகும்? மறைக்க ஒன்றுமில்லை என்றால், எதற்கும் பயப்படத் தேவையில்லை" என்று தனது எக்ஸ் பக்கத்தில் விமர்சித்துள்ளார்.

# அனைத்து தேர்தலிலும் தனித்தே போட்டி: சீமான்!




சென்னை, மே. 19– விஜய் தலைவர் விஜய், ஏற்கனவே கொடுத்துள்ள வாக்குறுதிகளின்படி, '6 இலவச சிலிண்டர்கள்' வழங்க ஈரானை கைபற்ற வேண்டும் என சென்னையில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்ச்சியில் பேசிய நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் கடுமையாக விமர்சனம் செய்தார்.

மேலும், வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் 2031 சட்டமன்றத் தேர்தல் என அனைத்திலும் நாம் தமிழர் கட்சி வழக்கம் போல் தனித்தே போட்டியிடும் என சீமான் கூறியுள்ளார்.

# நீட் தேர்வு முறைகேடு விவகாரம்: தேசிய தேர்வு முகமை தலைவருக்கு நாடாளுமன்ற நிலைக்குழு சம்மன்!




புதுடெல்லி, மே. 19– இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவுத்தேர்வு வினாத்தாள் கசிவு காரணமாக ரத்து செய்யப்பட்டு உள்ளது. எனவே அடுத்த மாதம் (ஜூன்) 21–ந்தேதி மறுதேர்வு நடத்தப்படும் என மத்திய அரசு அறிவித்து உள்ளது. சுமார் 23 லட்சம் பேரின் மருத்துவ கனவை சிதைத்துள்ள இந்த விவகாரத்தில் மத்திய அரசை எதிர்க்கட்சிகள் கடுமையாக சாடி வரு கின்றன.

இந்த நிலையில் கல்வி, பெண்கள், குழந்தைகள் நலத்துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழு வருகிற 21–ந்தேதி கூடுகிறது. அதில் இந்த முறைகேடு தொடர்பாக விவாதிக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்காக நீட் தேர்வை நடத்தும் தேசிய தேர்வு முகமை தலைவர் பிரதீப் குமார் ஜோஷி, உயர்கல்வித்துறை செயலாளர் வினீத் ஜோஷி உள்ளிட்டோருக்கு சம்மன் அனுப்பி உள்ளது. மேலும் இந்த கூட்டத்துக்கான நிகழ்ச்சி நிரல் வெளியிடப்பட்டு உள்ளது. அதில் தேசிய தேர்வு முகமையில் சீர்திருத்தம் செய்வது தொடர்பாக கல்வி அமைச்சக அதிகாரிகளின் கருத்துகள் கேட்கப்படும் என கூறப்பட்டு உள்ளது. மேலும் தேசிய தேர்வு முகமை சீர்திருத்தம் தொடர்பாக ராதாகிருஷ்ணன் கமிட்டி வழங்கியுள்ள பரிந்துரைகளை அமல்படுத்தியிருப்பது குறித்த ஆய்வை மேற்கொள்ளவும், வினாத்தாள் கசிவு வழக்கு தொடர்பான விசாரணை நிலவரம் குறித்து ஆய்வு செய்யவும் முடிவு செய்யப்பட்டு உள்ளது.

இதைப்போல கல்வியில் செயற்கை நுண்ணறிவின் தாக்கம் மற்றும் மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்துவதற்கான உத்திகள் குறித்தும் இந்தக் குழு விவாதிக்கும். இந்த கலந்துரையாடல்களுக்காக ஆந்த்ரோபிக் இந்தியா, பிரதம், கான்பூர் ஐ.ஐ.டி., இன்போசிஸ் மற்றும் சென்னை ஐ.ஐ.டி. ஆகியவற்றின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

பின்னர் நடைபெறும் மற்றொரு அமர்வில் உயர்கல்வி நிறுவனங்களின் பிரச்சினைகள் குறிப்பாக இடஒதுக்கீடு, காலியிடங்கள் மற்றும் தேசிய கல்விக்கொள்கை குறித்து விவாதிக்க உள்ளது. இதற்காக அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழக துணை வேந்தர், தேசிய சிறுபான்மை கல்வி நிறுவனங்களின் தலைவர் உள்ளிட்டோர் அழைக்கப்பட்டு உள்ளனர். இந்த நாடாளுமன்ற நிலைக்குழுவானது காங்கிரஸ் மூத்த தலைவர் திக்விஜய் சிங் தலைமையில் செயல்படுவது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாட்டில் அம்மா உணவகங்களை புதுப்பித்து சீரமைக்க முதல்-அமைச்சர் விஜய் உத்தரவு!




சென்னை, மே. 19– தமிழ்நாட்டில் தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் 383 அம்மா உணவகங்களும், மற்ற மாநகராட்சிகள், நகராட்சிகள் மூலமாக 237 அம்மா உணவகங்களும் செயல்பட்டு வருகின்றன. சமீப காலங்களில் இந்த உணவகத்தில் அளிக்கப்படும் உணவு வகைகளின் தரம் மற்றும் சுவை திருப்திகரமாக இல்லை என்ற தகவல் தமிழ்நாடு முதல் – அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நிலையில் தமிழ்நாடு முதல்– அமைச்சர் உரிய அரசுத்துறை செயலாளர்களுடன் இது குறித்து கலந்தாலோசனை செய்தார். அதைத் தொடர்ந்து தமிழ்நாடு முதல்–அமைச்சர் விஜய், அம்மா உணவகங்களுக்கு தேவைப்படும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துமாறும், சமையல் உபகரணங்களை உடனடியாகக் கொள்முதல் செய்யுமாறும், சுவையுடன்கூடிய தரமான உணவு வகைகளை தங்கு தடை யின்றி பொதுமக்களுக்கு வழங்கவும் ஆணையிட்டுள்ளார். மேலும் இந்த மறுசீரமைப்பிற்கும், பொருட்கள் கொள்முதல் செய்வதற்கும் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் பொது நிதியிலிருந்து செலவினங்களை மேற்கொள்ள முதல் – அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

# ரேஷன் கடைகளில் தவறுகள் கண்டறியப்பட்டால் கடும் நடவடிக்கை!



சென்னை, மே. 19–

நியாய விலை கடையில் உள்ள தராசு எடையை பொதுமக்கள் பார்க்கும் வகையில் இருபுறமும் டிஸ்ப்ளே தெரிகிறதா? என கடை பணியாளர்கள் சரி பார்க்க வேண்டும் என்று உணவுத்துறை உத்தரவிட்டுள்ளது.

நியாய விலை கடையில் தவறுகள் கண்டறியப்பட்டால் பணியாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என உணவுத்துறை எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

நியாய விலைக் கடை பணியாளர்கள் கவனமுடன் விழிப்புடனும் பணியாற்ற வேண்டும் என்று உணவுத்துறை அதிகாரிகள் அறிவுறுத்தலும் வழங்கி உள்ளனர்.

# பொது இடங்களில் இருந்து தெருநாய்களை அகற்றும் உத்தரவு; திரும்ப பெற சுப்ரீம் கோர்ட் மறுப்பு!



புதுடில்லி, மே. 19– தெருநாய்களை பொது இடங்களில் இருந்து அப்புறப்படுத்தும்படி 2025ம் ஆண்டு பிறப்பித்த உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை சுப்ரீம்கோர்ட் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

நாட்டில் வெறிநாய்க்கடி மற்றும் அதனால் ரேபிஸ் நோய் ஏற்பட்டு உயிரிழப்புகள் அதிகரித்து வந்த நிலையில் செய்திகள் அடிப்படையில் சுப்ரீம்கோர்ட் தானாக முன்வந்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தியது.

கடந்த 2025ம் ஆண்டு நவம்பர் 25ம் தேதி பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் ரயில் நிலையங்கள் போன்ற நிறுவனப் பகுதிகளில் இருந்து அனைத்து தெருநாய்களையும் அகற்றுமாறு சுப்ரீம்கோர்ட் உத்தரவிட்டது.

இந்த உத்தரவை திரும்ப பெறக்கோரி நாய் பிரியர்கள் சுப்ரீம் கோர்ட்டில் மனுத்தாக்கல் செய்தனர். இந்த வழக்கில் இன்று (மே 19) சுப்ரீம்கோர்ட் நீதிபதி விக்ரம் நாத் தலைமையிலான மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு பிறப்பித்துள்ள உத்தரவுகள்:

* ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் ஒரு விலங்குகளுக்கான கருத்தடை மையம் செயல்படுத்த வேண்டும்.
* மக்கள் தொகையை கருத்தில் கொண்டு, விலங்குகளுக்கான கருத்தடை மையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.
* கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமை என்பது, நாய்க்கடி அச்சுறுத்தலின்றி சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமையை உள்ளடக்கியது; இந்த விஷயத்தில் அரசு ஒரு செயலற்ற பார்வையாளராக இருக்க முடியாது.
* தெருநாய்கள் விவகாரத்தில் அனைத்து மாநில அரசுகள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
* நாய்கள் மூலம் பொதுமக்களுக்கு ஏற்படும் ஆபத்தை தடுக்க வேண்டும்.

இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

**தள்ளுபடி**

தெருநாய்களை பொது இடங்களில் இருந்து அப்புறப்படுத்தும்படி பிறப்பித்த உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை சுப்ரீம்கோர்ட் நீதிபதிகள் தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# அமெரிக்காவில் அதானிக்கு எதிரான அனைத்து வழக்குகளும் ரத்து!



அமெரிக்கா, மே. 19– தொழிலதிபர் கௌதம் அதானிக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மோசடி வழக்குகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டது.

சூரிய மின்சக்தி ஒப்பந்தங்களை பெற இந்திய அதிகாரிகளுக்கு தொழிலதிபர் கௌதம் அதானி 265 மில்லியன் டாலர் (சுமார் ரூ.2,450 கோடி) லஞ்சம் அளித்ததாக, கடந்த 2024–ஆம் ஆண்டு அமெரிக்க நீதித் துறை குற்றஞ்சாட்டியது. இதுதொடர்பாக அமெரிக்காவில் உள்ள நியூயார்க் நீதிமன்றத்தில் நீதித் துறை குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தது.

அந்தக் குற்றப் பத்திரிகையில், 'சூரிய மின்சக்தியை விநியோகிப்பதற்கான திட்டங்களுக்கு அமெரிக்க வங்கிகள் மற்றும் முதலீட்டாளர்களிடம் இருந்து பல ஆயிரம் கோடி ரூபாயை அதானி குழுமம் திரட்டியது. அந்த வங்கிகள் மற்றும் முதலீட்டாளர்களை மோசடிக்குள்ளாக்கி, அரசு அதிகாரிகளுக்கு லஞ்சம் அளிக்கப்பட்டது மறைக்கப்பட்டது' என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இதேபோல பங்குகள் மோசடி, தகவல் தொடர்பு மோசடி உள்ளிட்டவற்றில் கௌதம் அதானி, அவரின் உறவினர் சாகர் அதானி ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்த நிலையில், அமெரிக்க பங்கு முதலீட்டாளர்கள் பாதுகாப்பு சட்ட விதிகளை அவர்கள் மீறியதாக அமெரிக்க பங்குச்சந்தை ஒழுங்காற்று ஆணையம் (எஸ்இசி) குற்றஞ்சாட்டியது.

இதுதொடர்பாக நியூயார்க் மாவட்ட நீதிமன்றத்தில் எஸ்இசி வழக்கு தொடுத்தது. இந்தக் குற்றச்சாட்டுகளை கௌதம் அதானியும் சாகர் அதானியும் மறுத்தனர். அண்மையில் தன் மீதான மோசடி வழக்கைத் தள்ளுபடி செய்யுமாறு அமெரிக்க நீதிமன்றத்தில் அதானி மனு தாக்கல் செய்திருந்தார்.

**10 பில்லியன் டாலர் முதலீடு?**

அமெரிக்க பங்குச்சந்தை ஒழுங்காற்று ஆணையம் தொடர்ந்த வழக்கை நடத்துவதற்காக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் தனிப்பட்ட வழக்கறிஞர்களில் ஒருவரும், புகழ்பெற்ற 'சல்லிவன் & கிராம்வெல்' சட்ட நிறுவனத்தின் இணைத் தலைவருமான ராபர்ட் ஜே. ஜியுஃப்ரா ஜூனியர் தலைமையில் புதிய சட்டக் குழுவை சமீபத்தில் அதானி நியமித்திருந்தார்.

இந்த வழக்கை கைவிடுவது தொடர்பாக வாஷிங்டனில் உள்ள அமெரிக்க நீதித்துறையின் தலைமையகத்தில் நடைபெற்ற ஆலோசனையில் கலந்துகொண்ட ஜியுஃப்ரா, வழக்கை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆதாரங்கள் அரசுத் தரப்பிடம் இல்லை எனக் கூறி சில சான்றுகளை சமர்ப்பித்து வாதிட்டதாக கூறப்படுகிறது.

மேலும், அதானி மீதான குற்றச்சாட்டுகளை அரசுத் தரப்பு கைவிட்டால், அமெரிக்காவில் 10 பில்லியன் டாலர் முதலீட்டில் 15,000 வேலைவாய்ப்புகளை உருவாக்க அதானி உத்தரவாதம் அளித்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சென்னையில் அமலாக்கத்துறை சோதனை!




சென்னை, மே,. 19– சென்னையில் 5க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் இன்று காலை அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர். பழைய கார்களை வாங்கி விற்கும் பைனான்சியர் வீட்டிலும் இந்த சோதனை நடைபெற்று வருகிறது.

சென்னையில் அயனாவரம், திருமங்கலம் பகுதிகளில் இந்த சோதனை நடைபெற்று வருகிறது. வங்கிகளில் கடன் வாங்கி மோசடி செய்தல், சட்டவிரோத பண பரிவர்த்தை உள்ளிட்ட புகார்கள் அடிப்படையில் இந்த சோதனை நடைபெற்று வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

# பெட்ரோல், டீசல் விலை ஒரே வாரத்தில் 2-வது முறை உயர்வு!



புதுடெல்லி, மே. 19– பெட்ரோல், டீசல் விலை ஒரே வாரத்தில் இரண்டாவது முறையாக மீண்டும் உயர்ந்துள்ளதால், வாகன ஓட்டிகள் கலக்கமடைந்துள்ளனர்.

அமெரிக்கா – இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான மேற்காசிய போர் காரணமாக உலக அளவில் எரிவாயு விநியோகம் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா – இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான கடுமையான சண்டை காரணமாக கச்சா எண்ணெய் சந்தையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

உலக எரிசக்தி வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகிக்கும் ஹோர்மூஸ் நீரிணை வழியாகச் செல்லும் சரக்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டதன் விளைவாக கச்சா எண்ணெய் விலை உயர்வுக்கு முக்கிய காரணமாக கருதப்படுகிறது. இதனால், அதிக மக்கள்தொகை கொண்ட இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், சீனா உள்ளிட்ட நாடுகள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து கடந்த 4 ஆண்டுகளாக பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படாமல் இருந்த நிலையில், கடந்த மே 15 ஆம் தேதி பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டது. அதன்படி, பெட்ரோல் மற்றும் டீசல் விலை லிட்டருக்கு தலா ரூ.3 உயர்த்தப்பட்டது.

ஈரான் – அமெரிக்கா மோதலுக்கு முன்னதாக, ஒரு பீப்பாய் 70 முதல் 72 டாலராக இருந்த கச்சா எண்ணெய் விலை, போர்ப்பதற்றத்தின் கால கட்டத்தில் 120 டாலரை கடந்தது.

தற்போது 104 – 110 டாலர் என்ற அளவில் வர்த்தகம் ஆகி வருகிறது. அதேநேரத்தில் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு தொடர்ந்து சரிந்து வருவதும் இறக்குமதிச் செலவை அதிகரிக்க செய்துள்ளது.

இந்த நிலையில், இன்று காலை (மே 19) பெட்ரோல், டீசல்விலையை பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் உயர்த்தி உள்ளன.

தற்போது பெட்ரோல் மற்றும் டீசல் விலை லிட்டருக்கு 90 காசுகள் உயர்த்தப்பட்டுள்ளன. தலைநகர் தில்லியில் ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.97.77–ல் இருந்து ரூ.98.64 ஆகவும், டீசல் விலை ரூ.90.67–ல் இருந்து ரூ.91.58 ஆகவும் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

சென்னையில் பெட்ரோல் விலை 82 பைசா உயர்ந்து, ஒரு லிட்டர் ரூ.104.49–க்கும் டீசல் விலை 86 பைசா உயர்ந்து, ஒரு லிட்டர் ரூ.96.11–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

கொல்கத்தாவில் பெட்ரோல் விலை 96 பைசா உயர்ந்து, ஒரு லிட்டர் ரூ.109.70–க்கும், டீசல் விலை 94 பைசா உயர்ந்து, ஒரு லிட்டர் 96.07–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த 5 நாள்களில் இரண்டு முறை பெட்ரோல் மற்றும் டீசலின் ரூ. 4 வரை விலை உயர்த்தப்பட்டுள்ளதால் வாகன ஓட்டிகள் கலக்கமடைந்துள்ளனர். மேலும், எரிபொருளின் விலை உயர்வால் அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் பேருந்து, தனியார் வாகன சேவைகளின் விலையும் கடுமையாக உயரும் என அச்சம் எழுந்திருக்கிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020